முருகப்பெருமான் துணை

# மகான் விறன்மிண்ட நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.03.2023**, வெள்ளிக்கிழமை

1. தருமனே கலியினில் பசிபிணியை
   தயவாக விரட்டிக் காத்திட
   முருகப்பெருமான் சக்தியாக
   முழுமைகண்ட ஞானியாகவந்த
2. வந்தநல் அரங்கனே உமைபோற்றி
   வழங்குவேன் அனுகூல ஆசி
   சிந்தைபட சுபகிருது சேல் திங்கள்
   செப்பிட மூவையீர்திகதி புகர்வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 17 ம் நாள், 31.03.2023, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் விறன்மிண்ட நாயனாரும்
   வையகம் உயர்வுபெற உரைப்பேன்
   பாரதமெங்கும் ஞானவான்கள்
   படைகள் பெருகி வருதலுற
4. வருகவே அரங்கன் காட்டும்
   வள்ளல் தன்மை நிரம்பி
   தருமமும் சன்மார்க்கம் எனும்
   தயவும் சைவமும் பெருகி
5. பெருகியே ஞானவாழ்வின்மேல்
   பெரும் பிடிப்பாக மாறியே
   முருகப் பெருமான் வழிபாடே
   முழுமைதரும் எனும் உறுதி
6. உறுதி கூடி உலகினில் எங்கும்
   உலாவரும் குருவருள் பலம்
   ஆறுமுகனார் சக்தி வழி
   அரங்கனை நாடும் மக்களுக்கு
7. மக்களுக்கு அறுபத்து மூவரின்
   மகா சக்தியும் பலமும்
   ஆக்கமாக வரமாகக்  கிட்டி
   அனைவருக்கும் தேற்றம் காணும்

8. காண்கவே அரங்கமகானின்
கட்டளையாக ஏற்ற நல்
ஆன்மீகவாதிகளாக உயர்ந்து
ஆன்மீக அரசியல் களமதை
9. களமதை அரங்கன் தேடலாக
களமாக உருவாக்கி இனிதே
வலம் வருவர் உலகமெல்லாம்
வரம்பெற்ற ஞானவான்களாக
10. ஆகவே ஆற்றல் பெருகிட
அகிலமதில் ஞான ஆட்சி
மகத்துவம்பட மாற்றமாக
மக்களை காக்கும் விதமாக
11. ஆகவே அமைதல் கண்டு
ஆறுமுகனார் வெளிப்படவே
செகமெல்லாம் அமைதிநிலை
செழுமையும் சிறப்பும் காண்கும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—